# இலக்கியமும் உளவியலும்

**முனைவர் வெ. ரஞ்சனி**
உதவிப்பே பராசிரியர் கம்பன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை
https://doi.org/10.5281/zenodo.15526495

**முன்னுரை**

உளவியல் என்பது வாழும் உயிரினங்களின் நடத்தையைப் பற்றி அறியும் மனிதனின் முயற்சியாகும். குறிப்பாகத் தம்மை தரி ம அறியும் தனிப்பட்ட தேடுதல் எனவும் கூறலாம். நமது உணர்வுகள். எண்ணங்கள் செய்யும் செயல்களுடன் தொடர்புடையுது உளவியலாகும். இது நடத்தையை, நடத்தையின் வகைகைளைப் பற்றிய ஆய்வாகும்.

தன்னளவில் முரண்பாடுகள் அற்ற ஒத்திசைவும் சமுக அளவில் நல்லுறவான இணக்கமும் உளநலத்தின் இரு பெரும் கூறுகளாகும். இவற்றில் ஏதேனுமொன்றில் குறைவு ஏற்பட்டாலும் உள்ள முறிவு, உள்ளப்போராட்டம், உள்ள இறுக்கம் ஆகிய உணர்வு நிலைகள் ஏற்படுகின்றன. தன்னுணர்ச்சிப் பாடல்களாக மட்டுமே அமைந்துள்ள நம் தொல் இலக்கியமான சங்க இலக்கியங்களில் இத்தகு உணர்வு நிலைகளைப் பரவலாகக் காணமுடியும். பக்தி இலக்கியங்களில் நனவிலி மனத்தில் உளவியலை அறியலாம். காப்பிய பாத்திரங்களின் வழி தனிமனித உளவியலை மட்டுமன்றி சமுக உளவியலும் அழுத்தமாக வெளிப்படுகிறது. சிற்றிலக்கியங்களில் மனித மனத்தின் உயர் மனப்பான்மையை அறியலாம். இக்கால இலக்கியங்களில் பிராய்டு, யுங் போன்றோரின் உளவியல் கோட்பாடுகள் பொருந்தி வரக் காணலாம். இவ்வாறு காலந்தோறும் தோன்றும் இலக்கிய வகைகள் அனைத்திலும் மனித மனத்தின் உளவியல் பின்னிப்பிணைந்துள்ளதை அறியலாம்.

உளவியல் இன்று ஒரு பெரும் அறிவுத் துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்துள்ள உளவியல்சார் சிந்தனைகள் சங்கத்தமிழரிடையே நிலைபெற்று இருந்துள்ளமையைப் பழந்தமிழ் செய்யுட்களைப் பயில்வதன்மூலம் அறியலாம்.

சமுதாயத்தில் மனித மன ஆற்றுப்படுத்தலின் தேவைக்கும் தன்மைக்கும் மொழி என்னும் ஊடகத்தின் தேவை முக்கியமானதாகும். அதில் மரபுத் தொடர்களும்,கண்டனங்களும் மறைமுகமாகவும், நேரடியாகவும், இன்றியமையாததாகவும் அமைகிறது. ஈராயிரம், மூவாயிரம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே வாழ்க்கையை அகம், புறம் எனப் பிரித்து புலவர்கள் செய்யுட்களை இயற்றினர். இல்லற இன்பம் குறைவற்றதாக இருத்தல் வேண்டும் என்பதற்காக மட்டுமன்று, வாழ்க்கை ஒரு கலை, அதை மக்கள் உய்த்து உணர வேண்டும் என்பதற்காகவே சங்கப்பாடல்கள் இயற்றப்பட்டன.

உளவியல் நிபுணரான சிக்மண்ட் பிராய்டு சிந்தனையின்படி மனமானது நனவில் மனதிலே காணப்படுகின்ற சுய வெளிப்பாடுகளை, உள்ளவடுக்களைக் களைவதற்கான மன ஆற்றுப்படுத்தலைத் தானாக மேற்கொள்ள சில வழிமுறைகளைக் கையாள்வதாகக் கூறுகின்றார். அதாவது ஆழ்மன எண்ணங்கள், நிறைவேறாத ஆசைகள்என்பன பெரும்பாலும்

வெளிப்படுகின்றன. அதைப்போலவே கற்பனை கொள்ளல், கோபங் கொள்ள புறங்கூறல், பொய் கூறல், இழிவு கூறல் போன்ற மொழி வினை, வடிவங்களாகவும் வெளிப்படுகின்றன என்கிறார்.

## உணர்வு நிலை வெளிப்பாடு

சங்க இலக்கியங்கள் உயிரோட்டம் நிறைந்தவை. உணர்வு வெளிப்ப செய்யுளின் உயிராக அமைந்துள்ளது. உணர்வு என்பது மொழியைத் தாண்டி அனைத்து உயிர்களுக்கும், மனிதர்களுக்கும் பொதுவானது. மொழி கடந்து மனிதனை ஒன்றிணைக்கும் ஆற்றல் உணர்வு நிலைக்கு உண்டு. எனவே தொல்காப்பியர் தனது மெய்ப்பாட்டியலில் மனிதனின் அடிப்படை உணர்வுதல் குறித்து உளவியல் முறையில் சிந்தித்து சூத்திரமாக்கியுள்ளார்

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உலகையென்று அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”**

என்று மெய்ப்பாடுகளை எட்டு எனக் கணக்கிட்டு விளக்குகிறார். இதில் நகையை முதலில் வைத்ததன் பொருள் அனைவருக்குமானது. உவகையை இறுதியில் வைத்ததன் பொருள் பண்பட்டவனுக்கானது எனவும் விளக்கம் தருகின்றனர். இவ்வாறு தொல்காப்பியரை ஆராய்ந்து அறிந்தால் கூற்று வகைகள், கூற்று நிகழும் இடங்கள், ஐந்திணைக் கோட்பாடு, காதலில் தோழியின் பங்கு, பிரிவு குறித்த சிந்தனைகள் எனப் பல அக நிகழ்வுகளிலும் ஆழ்ந்த உளவியல் சிந்தனைகள் இருப்பதை உணர முடியும்.

## சங்கப் பாடல்களில் உளவியல்

சங்க இலக்கியம் வாழ்க்கை சார்ந்த நாடகப் பண்புடையது ஆகும். இதனால் இப்பாடல்கள் முற்றிலுமாக உளவியலை மையமாகக் கொண்டதாகும். அகம், புறம் ஆகிய இரண்டுமே உளம் சார்ந்த நிலையில் கட்டமைக்கப்பெற்ற பாடல்கள் ஆகும். உளவியலாளர் பொதுவாக இலக்கியங்ளில் உள்ள உளவியல் தன்மையை

1. படைப்பாளி உளவியல்
2. படைப்பாக்க உளவியல்
3. இலக்கியம் அளிக்கும் உளவியல்
4. அவையினர் (வாசிப்பவர்) உளவியல்

என்று பிரித்தறிவர். படைப்பாளர்கள் பற்றிய முழுமையான தகவல்கள் இருக்கும் பட்சத்தில் ‘படைப்பாளி உளவியல்” சாத்தியமாகும்.

## படைப்பாக்க உளவியலில் மனம்

படைப்பாக்கம் என்பது மனத்தின் வெளிப்பாடுகளுள் ஒன்று. மனம் என்பது முளையின் ஒரு பகுதி. புலவனின் கவியெண்ணத்தைத் தூண்டுவது, வாழ்க்கையின் ஏதேனும் கூறாக அமைகிறது. இன்ப மனநிலை, துன்ப மனநிலை ஆகிய இரண்டுமே கவிதைகள் பிறக்கக் காரணமாகின்றன சங்க இலக்கியத்தில் அமைந்த ‘காதல்” நிறைந்த பாடல்கள் அனைத்தும் இன்பமான நிலையில் பாடப்பட்டதாகக் கொள்ளப்படலாம், அதே சமயம் காதலில் பிரிவு, ஊடல் போன்ற படிநிலைகளில் வேறு வேறு துன்ப உணர்வுகளும் காரணமாகின்றன. அக, புற உணர்வுகள் படைப்பாளனின் சொந்த அனுபவமாகவோ அல்லது சமுகத்தில் பிறரிடமிருந்து பெற்றதாகவோ இருக்கலாம்.

## துயர மனநிலை

பாரி மகளிர் தன் தந்தையினை இழந்து நாடிழந்து நின்ற துயர நிலையைப் பாடலில் பதிவு செய்துள்ளனர்.

**“அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவின் எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்கொளார்”**

என வரும் பாடல்களில் வெண்ணிலா காயும் ஒரு பொழுதில் பறம்பு மலையில் தந்தையோடு இருந்தோம். தற்போது தந்தையும், பறம்பு மலையும் எம்மிடம் இல்லை. வெண்ணிலவு மட்டுமே உண்டு, என்று பாரிமகளிர் தம் துயர நிலையைப் பதிவு செய்துள்ளனர். அவர்களது மனத்தின் வெளிப்பாடாகவும், வடிகாலாகவும் அவர்தம் கவிதை அமைந்துள்ளது.

**உள்ளப் போராட்டம்**

ஒரு விருப்பத்தை நிறைவு செய்ய எண்ணும் மனம், உள்ளப் போராட்டத்திற்கு ஆளாகின்றது. தன் விருப்பம்மீது சமுதாய விழுமியங்களின் தாக்கம் ஏற்படுவதை உய்த்து உணரும் நிலை ஏற்படும்போது உள்ளப் போராட்டம் நிகழ்கிறது . இதனைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

தலைவனொருவன் பொருள் தேடச் செல்கிறான். பாதி வினையை முடித்தான். இந்நிலையில் தலைவியின் நினைவுகள் அவனைப் படுத்துகின்றது. மீதி வினையை முடிக்க ஊக்கம் தேடி தவிக்கிறான். வினையை முடித்தால் மட்டுமே பொருள் கிட்டும். பொருளே இனி அமைக்கப் போகிற வாழ்வின் ஆதாரம். வினைக்கும் தலைவியின் நினைவுக்குமான உள்ளப் போராட்டம் தலைவனுக்குள் நிகழ்கிறது. இதனைப் புலவரொருவர், “தேய்புரிப் பழங்கயிறு போல வீவது கொல்என் வருந்திய வுடம்பே” என்கிறார். உள்ளப் போராட்டத்தால் நிகழ்ந்த துன்பநிலையைதேய்ந்துஅறும்நிலையிலுள்ள பழங்கயிற்றிற்கு ஒப்பிடுகிறார். மிக நுண்ணியதாக உய்த்தறிந்து பாடியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இது அவர்களின் சொந்த அனுபவத்தில் தோன்றிய காவியமாகும்.

**பயம் அல்லது அச்சம்**

தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளுள் ஒன்று அச்சம் ஆகும். இந்த அச்சம் எழுவதற்கான காரணங்களாக,

**“அணங்கே விலங்கே கள்வர்தம் இறைமெனப் பிணங்கல் சாலா அச்சம் நான்கே”**[46]

என்பதையும் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார். அச்சம் அளவாக இருக் போது தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் நன்மையாகும். அது அளவை போதும் சமூகத்திற்கும் தனிமனிதனுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. நடுக்கம் எனும் உள்ளப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. அச்சம் எழும் சூழலாக தொல்காப்பியர் கூறும் காரணங்களைத் தாண்டி வள்ளுவர் மற்றொரு நிலைக்களனைக் கூறுகின்றார்.

**“இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்றது போலும் நிரப்பு”**

என்ற குறளில் நாள்தோறும் வருத்திய வறுமையும் பசியும் இன்றும் என்னிடம் வந்து விடுமோ என்று ஒருவன் அச்சப்படுகிறான். இத்தகைய வறுமையும் பசிய அறிவைக் கெடுக்கும் நிலையாக உளவியல் திரிபை ஏற்படுத்தி விடுகிறது. எனவே தான் புறநானூற்றுப் புலவர் ஒருவர், “விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கைப் பொறிப்புணர் உடம்பில் தோன்றி என் அறிவு கெட நின்ற நல் கூர்மையே” என்று எடுத்துரைக்கின்றார். வறுமையாலும் பிற அச்சங்களினாலும் உள்ளத்திரிபு ஏற்படுகின்ற நிலையையும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**தற்கொலைக்குத் தள்ளும் மனநிலை**

பொதுவாகச் சங்க இலக்கியங்களில் தன்னை மாய்த்துக் கொள்ளும் ‘தற்கொலை” நிகழ்வுகள் பதிவு அதிகம் இல்லை. ஆனால் இந்தச் சமூகம் அனுமதித்த ‘உடன்கட்டை ஏறுதல் பற்றிய பதிவு உள்ளது. பூதப்பாண்டியன் தேவி, சுற்றத்தார் தடுத்தும் ஈமத்தீயில் ஏறத் தயாராகுகிறாள். அதற்கென காரணத்தையும் எடுத்துரைக்கிறாள். கூடியிருப்பவரைப் பொல்லா சூழ்ச்சி பல்சான்றீரே! என்று அழைக்கிறாள். எனக்கு இரண்டு வாய்ப்புள்ளது. ஒன்று தீயில் இறப்பது. இரண்டாவது ‘வெள்ளரி விதை போன்ற பழைய சோறு, எள்துவையல், உப்பில்லாத வேளைக்கீரை, கற்பரப்பப்பட்ட படுக்கை” என வாழும் கைம்மை நிலை என்பதாகும். இந்த இரண்டில் சில நொடிகளில் துன்பம் தரும் நெருப்பே சிறந்தது. வாழ்நாளெல்லாம் கைம்மை பெரும் கொடிது. எனவே கொடியதில் ஒன்றைத் தேர்வு செய்துள்ளேன் என்கிறாள்.

இது உளவியலில் உள்ளப்போராட்ட நிலைகளில் ஒன்றாகக் கூறுவர். இரண்டு

*விரும்பத்தகாத இலக்குகளில் ஏதேனும் ஒன்றை அடைந்தே ஆக வேண்டிய நிலை நேரும்போது ஏற்படுகின்ற உள்ளப் போராட்டம். இதனைப் பேய்க்கும் ஆழ்கடலுக்கும் இடையே சிக்கிக் கொள்ளும் நிலை என்று உளவியலாளர் வரையறுப்பர். திருமதி பூதப்பாண்டியரின் இந்நிலை இங்கே சுட்டப்படுகிறது.*

**சமூக உளவியல் மருத்துவம்**

*சமூக நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதில் இலக்கியங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதனால் புலவர்கள் இலக்கியங்கள் பாட இலக்கண வரையறைகளை வகுத்துக் கொண்டனர். அறத்தையும் நன்மை தரும் செயல்களையும் பரிந்துரைத்தனர். எனவே சமூகத்தை நல்வழியில் நடத்தும் யாவியல் மருத்துவமாக இலக்கியங்கள் செயல்படுகின்றன. திருவள்ளுவர் குறளில் மனிதன் வாழும் வழிகளை வகுத்துத் தந்தார். இது எல்லா சமூகத்திற்கும் காலத்திற்கும் ஏற்றதாக அமைந்தது. இலக்கியங்கள்மீது மக்கள் கொண்ட நம்பிக்கைகளைச் சமயவாதிகள் கண்டனர். எனவே சமய கருத்துக்களையும் இலக்கியங்களில் தந்து வழிநடத்த ஆரம்பித்தனர். காலந்தோறும் தமிழ் இலக்கியங்கள் புத்தம், சமணம், சைவம், வைணவம், கிறித்துவம், இஸ்லாமியம் என்று அனைத்து சமய கருத்துக்களும் பரவி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை அறியலாம்.*

*இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் உளவியல் கருத்துகள்நிறைந்துகிடக்கின்றன. உளவியல் தன்மையிலமைந்த பாடல்களும் காணப்படுகின்றன. படிப்பவர் மனநிலையைச் செம்மைப்படுத்தும் உளவியல் நோக்கிலான பாடல்களும் உண்டு. எனவேதான் இலக்கியங்களில் உளவியல் குறித்த ஆராய்ச்சிகள் தற்போது முக்கியத்துவம் பெற்று வருகின்றன.*

**துணைநின்ற நூல்கள்**

*1. இலக்கியமும் உளவியலும், மறைமலை. சி.இ. மாணிக்கவாசகர் பதிப்பகம்*
*2. இலக்கிய மேய்ச்சல்-நடராஜன் . நியு செகசரிபுக்ஹவுஸ்*